செ.வெ.எண்: 762/2026 நாள்: 11.11.2026

பழங்குடியினர் நலக்குழுவில் உறுப்பினர்களை தேர்வு செய்ய தகுதியான பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

சேலம் மாவட்டத்தில் பழங்குடியினர் நலக்குழுவில் உறுப்பினர்களை தேர்வு செய்ய தகுதியான பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளதாவது,

பழங்குடியினர் மக்களின் கோரிக்கைகளையும், தேவைகளையும் உடனுக்குடன் நிவர்த்தி செய்யவும், பழங்குடியின மக்களின் குரல் நேரடியாக அரசின் கொள்கை மற்றும் திட்டமிடலில் பிரதிபலிக்கவும் பழங்குடியினர் மக்களின் தேவைகளுக்கு ஏற்ப நலத்திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்திட பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் ஒன்றான சேலம் மாவட்டத்தில் மாவட்ட அளவிலான "பழங்குடியினர் நலக்குழு" அமைக்கப்பட உள்ளது.

எனவே பழங்குடியின மக்களிடையே சேவையாற்றி வரும் ஐந்து உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். ஐந்து உறுப்பினர்களில் இரண்டு பெண் உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படுவர்.

அதன்படி, பழங்குடியினர் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து சேவையாற்றி வரும், குற்ற வழக்குகள் எதுவும் நிலுவையில் இல்லாத தகுதியான பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த நபர்கள் தங்கள் சுயவிவரக் குறிப்புகளுடன் (Bio data) சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் செயல்படும் திட்ட அலுவலகம், பழங்குடியினர் நலம் அறை எண்.305 இல் தங்கள் விருப்ப மனுக்களை 16.11.2026-க்குள் நேரில் சமர்பிக்குமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.
